## பொலநறுவைக்காலம்

### திவங்க ஆலயம்



1) கி.பி 12ம் நூற்றாண்டில் முதலாம் பராக்கிரமபாகு மன்னனால் அமைக்கப்பட்ட இந்துக் கட்டடக்கலை மரபில் அமைந்து பௌத்த சிலைமனை எது? திவங்கஆலயம்

2) மூவம்ச சிற்பக்கூடம் என அழைக்கப்படுவது எது? திவங்கஆலயம்

3) திவங்க சிலைமனையில் வரையப்பட்டுள்ள ஜாதகக் கதைச் சித்திரங்கள் எவை?

   தேமிய ஜாதகம், சசஜாதகம், அசங்கவதி ஜாதகம், சூழபத்ம ஜாதகம்

4) திவங்க சிலைமனையின் கருவறையில் காணப்படும் புத்தர்சிலை ஆக்கப்பட்ட ஊடகம், நிலை யாது?

   நிலை – திரிபங்கநிலை ஊடகம் - செங்கல்

5) திவங்க சிலைமனையில் வரையப்பட்ட ஓவியங்கள் எந்தக் கால யுகத்தை சேர்ந்தவை?

   அனுராதபுரம், பொலநறுவை, கண்டி

6) அனுராதபுரம், பொலநறுவை திவங்க சிலைமனையில் வரையப்பட்ட ஓவியங்களில் அனுராதபுர கால பண்புகளைக் கொண்ட ஓவியங்கள் காணப்படுவது ?

   தேவாராதனை , சங்கிஸ்கபுரத்திற்கு வருகை தரல்

7) திவங்க சிலைமனை ஓவியங்கள் வரையப்பட்ட நுட்பமுறை யாது? உலர்சுதை மரபு

8) பிற்காலத்தில் வரையப்பட்டதாக கூறப்படும் ஓவியம் எது? தேமிய ஜாதகம்

**தேவாராதனை (தேவஅழைப்பு)**



1) திவங்கசிலை மனையின் அர்த்த மண்டபத்தில் வரையப்பட்டுள்ள ஓவியம் எது?

   தேவாராதனை (தேவஅழைப்பு)

2) தேவ ஆராதனை எனும் ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருப்பொருள் எது?

   தேவலோகத்தில் வசித்த போதி சத்துவருக்கு மண்ணுலகில் பிறக்கும் படி தெய்வத்தினால் விடுக்கப்பட்ட அழைப்பு

3) தேவாராதனை என்னும் ஓவியம் அஜந்தாவின் எவ் ஓவியத்துடன் ஒத்ததாக கூறப்படுகின்றது?

அஜந்தா பத்மபாணி போதிசத்துவர் உருவை ஒத்தது.

4) தேவ அழைப்பு எனும் ஓவியத்தைை வரைவதற்கு உபயோகிக்கப்பட்டுள்ள வர்ணங்கள் எவை?

சிவப்பு, கபிலம், மஞ்சள் போன்றன

**புத்தர் சங்கிஸ்ஸ புரத்திற்கு ஏணியில் வருகை தரல்**





1) புத்தர் சங்கிஸ்ஸ புரத்திற்கு வருகை தரல் என்ற ஓவியம் திவங்கசிலை மனையில் எங்கு வரையப்பட்டுள்ளது?

2) இவ் ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருப்பொருள் யாது?

பிரம்மாவால் படைக்கப்பட்ட ஏணியால் புத்தபெருமான் சங்கிஸ்ஸ புரத்தை அடையும் காட்சியும் திவ்ய ராஜனுக்கு உபதேசம் செய்வதற்கு தவ்திசா தேவலோகத்திற்கு வருகை தரும் காட்சியும் காட்டப்பட்டுள்ளது.

3) சங்கிஸ்ஸ புரத்திற்கு வருகை தரல் என்ற ஓவியத்தில் காட்டப்பட்டுள்ளவர்கள் யாவர்?

பிரம்மா, இந்திரன், புத்தபெருமான்

4) இங்கு புத்தபெருமான் வெளிக்காட்டியுள்ள முத்திரை வடிவம் யாது? விதர்க்க முத்திரை

5) சங்கிஸ்ஸ புரத்திற்கு வருகை என்ற ஓவியத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள் எவை? சிவப்பு, கபிலம், மஞ்சள்

6) இந்திரன் குடை ஒன்றை புத்தரிடம் கொடுப்பது போலவும் பிரம்மன் பூ வொன்றுடனும் காணப்படும் காட்சி எவ் ஓவியத்தில் உள்ளது? தேமிய ஜாதகம்

7) இவ் ஓவியத்தில் புத்தர் பெருமான் எவ்வாறு வரையப்பட்டுள்ளார்?

புத்தபெருமானின் உருவம் இயல்பான அளவை விட பெரிய அளவில் வரையப்பட்டுள்ளது.

**தேமிய ஜாதகம்**



1) சித்திராவலிய (தொடர்சித்திரம்) முறையில் கண்டிக்கால ஓவியப் பாணியில் உருவங்கள் பக்கத் தோற்றத்தில் வரையப்பட்ட ஓவியம் எது? தேமிய ஜாதகம்

2) தேமிய ஜாதகம் எனும் ஓவியத்தின் மூலம் வெளிப்படுத்தப்பட்டுள்ள கருப்பொருள் யாது?

குதிரை இரதத்தில் கை கால்களை அசைக்காது வைத்திருக்கும் தேமிய குமாரனும் குழிபறிக்க ஆயத்தமாகும் சுனந்த என்னும் இரத ஓட்டியும் அவனுக்கு முன்னால் போதிசத்துவர் போன்று நிற்கும் தேமிய குமாரனும் காட்டப்பட்டுள்ளனர்.

3) இவ் ஓவியம் வரைவதற்காக அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ள வர்ணங்கள் எவை?

சிவப்பு, கபிலம், மஞ்சள், செங்கபிலம்

4) இந்த ஓவியம் எக்கால மரபை காட்டுகின்றது?

கண்டிநகர்கால ஓவிய மரபில் ஓவியங்கள் தொடர்சித்திர முறையில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

**நிஸங்கலதா மண்டபம்**





1 நிஸங்கலதா மண்ட்டபம் அமைக்கப்பட்ட காலம் எது? பொலநறுவைக் காலம்

2 நிஸங்கலதா மண்டபம் யாரால் அமைக்கப்பட்டது? நிஸங்க மல்ல மன்னனால்

3 இம்மண்டபம் அமைக்கப்பட்ட காரணம் என்ன?

தலதாவை வைப்பதற்காகவும் பிரித் போதனைகளைக் கேட்பதற்காகவும்

4 இங்கு எத்தனை வரிசையில் எத்தனை தூண்கள் காணப்படுகின்றன?

இரண்டு வரிசையில் எட்டுத் தூண்கள்.

5 நிஸங்கலதா மண்டபத்தின் தூண்கள் **தாமரைத் தண்டு** வடிவத்தில் அமைந்துள்ளன.

6 நிஸங்கலதா மண்ட்டபத்தின் தூணின் உச்சி **பாதிமலர்ந்த தாமரைப் பூவின்** வடிவத்தில் செதுக்கப்பட்டுள்ளது.

7 நிஸங்கலதா மண்ட்டபத்தின் மத்தியில் **சிறிய தாதுகோபம்** காணப்படுகிறது.

8 நிஸங்கலதா மண்ட்டபத்தின் வேலியானது **கற்பாளங்களால்** அமைக்கப்பட்டது

**இந்து ஆலயங்கள்**



1) இரண்டாம் சிவாலயம் அமைக்கப்பட்ட காலம்

(1)கி.பி முதலாம் நூற்றாண்டு

(2)கி.பி நாலாம் நூற்றாண்டு

(3)கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு

(4)**கி.பி பதினோராம் நூற்றாண்டு**

2) இரண்டாம் சிவாலயம் எந்த மன்னரால் அமைக்கப்பட்டது

(1)**சோழ மன்னரால்** (2)சேர மன்னரால் (3)பாண்டிய மன்னரால் (4)பல்லவ மன்னரால்

3) 2ம் சிவாலயம் என்ன சிற்பமுறையில் அமைக்கப்பட்டது?

சோழ சிற்பமுறை

4) வானவன் மாதேவி ஈசுரமுடையார் ஆலயம் என அழைக்கப்பட்ட ஆலயம் எது?

இரண்டாம் சிவாலயம்

**காரைக்கால் அம்மையார்**



1) இரண்டாம் சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட பேய் வடிவமுடைய

சிவனடியார் சிலை யாது? காரைக்கால் அம்மையார்

2) தற்பொழுது இச் சிலை எங்கு காணப்படுகின்றது?

பொலநறுவை நூதனசாலையில்

3) இச் சிலை செய்யப்பட்ட ஊடகம் யாது? வெண்கலம்

**பார்வதி**



1) சிறப்பான சிற்ப நுட்பங்களையுடைய பெண் தெய்வச்சிலையாக

விளங்குவது எது? பார்வதி

2) தற்பொழுது இச்சிலை எங்கு காணப்படுகின்றது?

பொலநறுவை நூதனசாலை

3) இச் சிலை செய்யப்பட்ட ஊடகம் யாது? வெண்கலம்

4) கைகளில் காட்டப்பட்டுள்ள முத்திரை யாது?

வலது கை – கடகஹத்த முத்திரையும், இடது கை – லோகஹஸ்த் முத்திரையும்.

**சுந்தர மூர்த்தி நாயனார**



1. இந்து சமயத்திற்குரிய இச்சிலையின் பெயர் யாது? சுந்தர மூர்த்தி நாயனார்
2. பொலநறுவையில் எத்தனையாம் சிவாலயத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது?

   5ம் இலக்க சிவாலயம்
3. தற்பொழுது இச் சிலை எங்கு காணப்படுகின்றது? கொழும்பு நூதனசாலை
4. இச் சிலை செய்யப்பட்ட ஊடகம் யாது? வெண்கலம்
5. இச்.சிலையின் உடலமைப்பு என்னிலையில் காட்டப்பட்டுள்ளது? திரிபங்க மூவளைவு
6. கைகளில் காட்டப்பட்டுள்ள முத்திரை யாது? கடகஹத்த முத்திரையும்

**நடராஜர் சிலை**



1. இரண்டாம் சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்டதும் நடனத்தின் சிறப்பினை வெளிப்படுத்துவதுமான சிலை யாது?

   நடராஜர்
2. பொலநறுவையில் எத்தனையாம் சிவாலயத்தில் இருந்து கண்டுபிடிக்கப்பட்டது? 1ம் சிவாலயத்தில்
3. தற்பொழுது இச் சிலை எங்கு காணப்படுகின்றது? கொழும்பு அரும்பொருட்சாலை
4. இச் சிலை செய்யப்பட்ட ஊடகம் யாது? வெண்கலம்
5. இச்சிலையின் நுட்பமுறை யாது? வார்த்தல்
6. இச் சிலை வெளிப்படுத்தி நிற்கும் கருத்து யாது? பிரபஞ்சத்தின் இயக்கம்
7. வெளிவட்ட அமைப்பின் கலைப்பதம்? திருவாசி
8. அதில் காணப்படும் அலங்கார வடிவம்? தீச்சுடர்
9. ஆட்டத்தின் வேகத்தைக் காட்ட கலைஞன் கையாண்ட திறமை யாது?

   தலைமுடி பக்கவாட்டில் அசைதல், இடுப்பில் இருந்து துண்டு பறத்தல்

**முதலாம் சிவாலயம்**








1. முதலாம் சிவாலயம் எம்மன்னரால் அமைக்கப்பட்டது? பாண்டிய மன்னரால்
2. முதலாம் சிவாலயம் அமைக்கப்பட்ட காலம் எது? கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டு
3. முதலாம் சிவாலயத்தின் தூண்கள் எந்த வடிவத்தில் அமைக்கப்பட்டுள்ளன?

   தாமரை மலர் வடிவில்
4. முதலாம் சிவாலயத்தில் கண்டெடுக்கப்பட்ட சிலைகள் எங்கே வைக்கப்பட்டுள்ளன

   கொழும்பு நூதனசாலையில்

**வட்டதாகே**





1. வட்டதாகே எனப்படுவது யாது?



   தூபியைச் சுற்றி மூடி பாதுகாப்பிற்காக அமைக்கப்படும் வட்டவடிவ அரண் அல்லது கட்டிடம்
2. வட்டதாகே வேறு எப்பெயர்களால் அழைக்கப்படுகின்றது? சைத்தியகர ,தூபகர
3. இலங்கையில் அமைக்கப்பட்ட முதல் வட்டதாகே எது? தூபராம வட்டதாகே
4. வட்டதாகேயின் கூரை எவ்வாறு பொருத்தப்பட்டிருந்தது?

   ஒரே மையப்புள்ளியுடன் அமைக்கப்பட்ட மூன்று கற்றூண் வரிசையின் மேல்
5. எவ்வகையான சைத்தியங்களுக்கு வட்டதாகே அமைக்கப்பட்டது?

   சிறிய சைத்தியங்களுக்காக மட்டுமே
6. அனுராதபுர வட்டதாகேயிற்கு உதாரணம் தருக? தூபராமய,அம்பஸ்தல,லங்காராம
7. பொலநறுவைக்கால வட்டதாகேயிற்கு உதாரணம் தருக?

   மெதிரிகிரிய,பொநறுவை வட்டதாகே

**பொலநறுவை கல்விகாரைப் புத்தர் சிலைகள்**

1. இந்த விகாரை எத்தனையாம் நூற்றாண்டு எம் மன்னனால் நிர்மாணிக்கப்பட்டது?

   கி.பி 12ம் நூற்றாண்டு

2. மூன்று நிலைப் புத்தர் சிலைகளையும் ஒருங்கே காணப்படும் விகாரை எது? கல்விகாரை
3. கல்விகாரை வேறு எப் பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது? உத்தரா ராமய
4. கல்விகாரைப் புத்தர் சிலைகள் எந்த பௌத்த எண்ணக்கரு மேலோங்கியுள்ளது?

   மாகாயான பௌத்தம்

5. கல்விகாரைப் புத்தர் சிலைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ள கலைமரபு யாது? பல்லவ மரபு
6. கல்விகாரைப் புத்தர் சிலைகளின் பொதுப் பண்புகள் எவை?

   பாதி திறந்த கண்கள், நீண்ட காதுகள், சுருள் தலைமுடி கொண்ட உச்சிக் குடும்பி ஒருபக்கத்தை மறைக்கும் உடலோடு ஒட்டிய சமாந்தர ரேகைகளை உடைய காவியுடையுடன் வீரக்குணங்களையும் கொண்டுள்ளது.

**அமர்ந்த நிலையிலிருக்கும் புத்தர் சிலை**



1. இப்புத்தர் சிலை எவ்வாசனத்தில் அமர்ந்துள்ளார்?

   வீராசனம்

2. இப்புத்தர் சிலை குறிக்கும் முத்திரை யாது?

   தியானமுத்திரை

3. இப் புத்தர் சிலை அமர்ந்துள்ள ஆசனத்தில்

   காணப்படும் குறியீடு யாது? வஜ்ஜுர குறியீடு

4. புத்தர் சிலையின் தலைக்குப் பின்னால் காணப்படும் அமைப்பு யாது? மகரதோரணம்

**வித்தியாதரக் குகை புத்தர் சிலை**

1. இயற்கையான கற்பாறையைக் குடைந்து அமைக்கப்பட்ட

   குகையினுள் நிர்மாணிக்கப்பட்ட புத்தர் சிலை எது?

   வித்தியாதரப்புத்தர்சிலை



2. இப்புத்தர் சிலை குறிக்கும் முத்திரை யாது?

தியாண முத்திரை

3. இப் புத்தர் சிலை அமர்ந்துள்ள ஆசனத்தில் காணப்படும் குறியீடு யாது?

வஜ்ஜுர குறியீடுகளையும் சிம்ம உருவ செதுக்கல்களையும் கொண்டது.

4. புத்தர் சிலையின் தலைக்குப் பின்னால் காணப்படும் அமைப்பு யாது?

தோரண வேலைப்பாடும், குடைவடிவமும் காணப்படுகின்றது.

5. வித்தியாதாரப் புத்தர் சிலையின் இரு மருங்கிலும் காணப்படும் வடிவம் யாது?


இரு சிங்க உருவங்கள்


6. இப் புத்தர் சிலையின் தலைக்குப்பின்னால் காணப்படும் அமைப்பு யாது?

பிரம்மாவும் விஸ்னுவும் சாமரம் ஏந்திய வித்தியாதாரர்களும்

7. இச்சிலையின் உயரம் யாது? 4 அடி 7 அங்குலம்

**துயில் நிலைப் புத்தர் சிலை**





1. புத்த பெருமானின் பரிநிர்வாண நிலையைக் காட்டுவதற்காக கூறப்படும் புத்தர் சிலை எது?

துயில் நிலைப் புத்தர் சிலை

2. சயணநிலைப் புத்தர் சிலையின் நீளம் யாது? 46 அடி

3. இச் சிலையின் சிறப்பு யாது?

தலை வைத்துள்ள தலையணைப்பகுதி பதிந்துள்ள விதம் நுணுக்கமாக காட்டப்பட்டிருத்தல் அற்புதமானது.

**நின்ற நிலைப் புத்தர் சிலை**

1) புத்தபெருமானின் பரிநிர்வாணத்தை இட்டு வேதனைப்படும் ஆனந்த தேரரின் சிலை எனக் கூறப்படும் சிலை?

   நின்ற நிலைப் புத்தர் சிலை

2) நின்ற நிலைப் புத்தர்சிலை வெளிப்படுத்தும் முத்திரை யாது? பாவ துக்க துன்கிந்த (சோக)



3) நின்ற நிலைப் புத்தர்சிலையின் உயரம் யாது? 23 அடி

4) பிறரின் துக்கத்திற்கு துக்கித்தல் தன்மை வெளிப்படுத்தும் வகையில் செதுக்கப்பட்ட சிலை என பரணவிதானவினால் கூறப்படும் சிலை எது?

   நின்ற நிலைப் புத்தர் சிலை

5) கல்விகாரைப் புத்தர் சிலைகளில் மூவளைவுடன் நிர்மாணிக்கப்பட்ட சிலை எது? நின்ற நிலைப் புத்தர் சிலை

6) நின்ற நிலைப் புத்தர்சிலை நிர்மாணிக்கப்பட்ட சிற்பமரபு யாது? பல்லவ

**பொத்குல் விகாரைச் சிலை**





1. இச்சிலையை இனங்காண்க?

   பராக்கிரமபாகு சிலை

2. இச்சிலை எங்கு காணப்படுகின்றது?

   பொற்கொல் விகாரைக்கு அண்மையில்

3. இச் சிலை நிற்கும் நிலை யாது?

   திரிபங்கநிலை

4. பொத்குல் விகாரைச் சிலை பற்றி ஆய்வாளர்களின் கருத்தைத் தருக?

   கபில ரிஷி, புலஸ்தி முனி, பொலநறுவையில் வாழ்ந்த குருளுகோமி

5 பராக்கிரமபாகு சிலையில் கையில் காணப்படும் பொருள் பற்றி பரணவிதானவின் கருத்து யாது? அரசைக் குறிக்கின்றது. நுகத்தடி